# அத்தியாயம் XVII

## சொத்துக்கு எதிரான குற்றங்கள்
## (Offences Against Property)

### திருட்டு. (Theft)

**பிரிவு ३०३. திருட்டு (Theft)**

*எந்தவொரு அசையும் சொத்தையும்,*

- *எந்தவொரு நபரின் உடமையில் (possession) இருந்து,*
- *நேர்மையற்ற முறையில் (dishonestly) எடுத்துக்கொள்ளும் நோக்கத்துடன்,*
- *அந்த நபரின் அனுமதியின்றி,*
- *அத்தகைய சொத்தை எடுத்துக் கொள்வதற்காக, அந்த சொத்தை நகர்த்துகிற நபர்,*
  - *திருட்டை செய்வதாக கூறப்படுகின்றது.*

*விளக்கம் 1: அசையும் சொத்தாக இல்லாமல், பூமியுடன் இணைந்திருக்கும் ஒரு பொருள், திருட்டுக்கு உட்பட்டது அல்ல; ஆனால் அது பூமியிலிருந்து துண்டிக்கப்பட்டவுடன், திருட்டுக்கு ஆளாகும் திறன் கொண்டது.*

*விளக்கம் 2: துண்டிக்கப்படுவதை விளைவிக்கும் அதே செயலால், ஏற்படும் நகர்வு ஒரு திருட்டாக இருக்கலாம்.*

*விளக்கம் 3: ஒரு பொருளை நகர்த்துவதைத் தடுக்கும் ஒரு தடையை அகற்றுவதன் மூலம், அல்லது வேறு எந்த பொருளில் இருந்தும் அதை பிரிப்பதன் மூலம் அல்லது உண்மையில் அதை நகர்த்துவதன் மூலம், ஒரு நபர் ஒரு பொருளை நகர்த்துவதாகக் கூறப்படுகின்றது.*

*விளக்கம் 4: எந்த வகையிலும், ஒரு மிருகம் நகர்வதை ஏற்படுத்துகின்ற நபர், அந்த மிருகத்தை நகர்த்துவதாகக் கூறப்படுகின்றது, மற்றும் அந்த இயக்கத்தின் விளைவாக, அந்த விலங்கால் நகர்த்தப்பட்ட அனைத்தையும் நகர்த்துவதாகக் கூறப்படுகின்றது.*

*விளக்கம் 5: வரையறையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்புதல், வெளிப்படையாக அல்லது மறைமுகமாக, இருக்கலாம்; மற்றும் பொருளை உடமையாக வைத்திருக்கும் நபரால், அல்லது அந்த நோக்கத்திற்காக, வெளிப்படையாக அல்லது மறைமுகமாக, அதிகாரம் பெற்ற எந்தவொரு நபராலும் கொடுக்கப்படலாம்.*

*<u>எடுத்துக்காட்டுகள்:</u>*

*(அ) 'ஔ' இன் அனுமதியின்றி, நேர்மையற்ற வகையில், மரத்தை 'ஔ' வசம் இருந்து எடுத்துக் கொள்ளும் நோக்கத்துடன், 'அ' ஒரு மரத்தை வெட்டி தரையில் வீழ்த்துகின்றார். இங்கே, 'அ' மரத்தை எடுப்பதற்காக, மரத்தை வெட்டியவுடன், அவர் திருட்டைச் செய்துள்ளார்.*

ஆ) 'அ' என்பவர், தனது பாக்கெட்டில் இருந்து, 'ஔ' ன் நாய்களுக்கு இரையை வைக்கின்றார். இதனால் 'ஔ'ன் நாயை, அவரைப் பின்தொடரத் தூண்டுகின்றார். இங்கே, 'அ' ன் எண்ணம் நேர்மையின்றி, 'ஔ'ன் அனுமதியின்றி, அவரின் உடைமையிலிருந்து நாயை வெளியேற்றுவதாக இருந்தால், 'ஔ'ன் நாய் 'அ' ஐப் பின்தொடர ஆரம்பித்தவுடன், 'அ' திருட்டைச் செய்கின்றார்.

(இ) பொக்கிஷப் பெட்டியை (box of treasure) எடுத்துச் செல்லும் காளை மாட்டை, 'அ' என்பவர் காண்கிறார். நேர்மையற்ற முறையில் பொக்கிஷத்தை எடுத்துச் செல்வதற்காக, அவர் ஒரு குறிப்பிட்ட திசையில் காளையை விரட்டுகிறார். காளை மாடு நகரத் தொடங்கியவுடன், 'அ' பொக்கிஷப் பெட்டி திருட்டைச் செய்துள்ளார்.

(ஈ) 'ஔ' ன் வேலைக்காரனாக இருக்கும் 'அ' என்பவரிடம் 'ஔ' இன் தட்டு பாதுகாப்புக்காக 'ஔ' ஆல் ஒப்படைக்கப்பட்டது. 'ஔ' இன் அனுமதியின்றி நேர்மையற்ற முறையில், தட்டுடன் 'அ' ஓடிவிடுகின்றார். 'அ' திருட்டைச் செய்துள்ளார்.

(உ) 'ஔ' ஒரு பயணத்தில் செல்லும் போது, 'ஔ' திரும்பும் வரை, ஒரு கிடங்கின் காப்பாளரான (warehouse keeper) 'அ' விடம் தனது தட்டை ஒப்படைக்கிறார். அவர், அந்தத் தட்டை, பொற்கொல்லரிடம் எடுத்துச் சென்று விற்கிறார். இங்கே தட்டு 'ஔ' உடைமையில் (possession) இல்லை. எனவே அதை 'ஔ' இன் வசம் இருந்து எடுக்க முடியாது. அதனால் 'அ' திருட்டு குற்றம் செய்யவில்லை. இருப்பினும் அவர் நம்பிக்கை மோசடி (criminal breach of trust) செய்திருக்கலாம்.

(ஊ) 'ஔ' குடியிருக்கும் வீட்டில், ஒரு மேஜையில் 'ஔ'க்குச் சொந்தமான மோதிரத்தை 'அ' காண்கிறார். இங்கே மோதிரம் 'ஔ' வசம் உள்ளது. நேர்மையற்ற முறையில் அதை அகற்றினால், 'அ' திருட்டைச் செய்கிறார்.

(எ) 'அ' என்பவர் நெடுஞ்சாலையில் ஒரு மோதிரம் கிடப்பதைக் கண்டார். அது எந்தவொரு நபரின் கையிலும் உடமையாக (possession) இல்லை. 'அ' அதை எடுத்துக்கொள்வதன் மூலம், அவர் எந்த திருட்டையும் செய்யவில்லை. இருப்பினும் அவர் சொத்துக்களை 'குற்றமுறு கையாடல்' (misappropriation of property) குற்றம் செய்திருக்கக் கூடும்.

(ஏ) 'ஔ' இன் ஒரு மோதிரம், அவரின் வீட்டில், ஒரு மேஜையில் கிடப்பதை 'அ' காண்கிறார். தேடப்படும் மற்றும் கண்டறியப்படும் எனப் பயந்து, உடனடியாக மோதிரத்தை தவறாகப் பயன்படுத்தத் துணியவில்லை. காணமல் போனதை மறந்தவுடன், மறைந்திருக்கும் இடத்திலிருந்து, மோதிரத்தை எடுத்து விற்கும் நோக்கத்துடன், 'ஔ' ஆல் கண்டு பிடிக்க மிகவும் சாத்தியமற்ற ஒரு இடத்தில் மோதிரத்தை மறைக்கின்றார். இங்கே 'அ', மோதிரத்தை முதலில் நகர்த்தும் நேரத்தில், திருட்டைச் செய்கிறார்.

(ஐ) 'அ' தனது கடிகாரத்தை 'ஔ', என்பவரிடம் பழுது நீக்கக் கொடுத்தார். 'ஔ' அதை தனது கடைக்கு எடுத்துச் செல்கிறார். கடன்பட்டதற்காக கடிகாரத்தை, சட்டபூர்வமாக பற்றுரிமையாக (lien) வைத்திருக்கும் வகையில் 'அ' கடன்பட்டிருக்கவில்லை எனும் போது, 'அ' கடைக்குள் வெளிப்படையாக நுழைந்து, தனது கைக்கடிகாரத்தை 'ஔ'

*கையில் இருந்து வலுக்கட்டாயமாக அதை எடுத்துச் செல்கிறார். இங்கே 'அ', குற்றமுறு அத்துமீறல் மற்றும் தாக்குதலைச் (criminal trespass and assault) செய்திருந்தாலும், அவர் செய்தது, நேர்மையற்ற முறையில் செய்யப்படாததால், திருட்டைச் செய்யவில்லை.*

*(ஒ) கடிகாரத்தை சரிசெய்த வகையில் 'ஔ' க்கு பணம் கடன்பட்டிருந்ததால், கடன்பட்டதற்காக கடிகாரத்தை, சட்டபூர்வமாக பற்றுரிமையாக (lien) 'ஔ' வைத்திருக்கும் பொழுது, 'ஔ' க்கு சொத்து இழப்பு ஏற்படுத்தும் நோக்கத்துடன், 'ஔ' இன் கைவசம் இருந்து கடிகாரத்தை 'அ' எடுக்கிறார். நேர்மையற்ற முறையில் எடுத்துக் கொள்வதால், அவர் திருட்டை செய்கிறார்.*

*(ஓ) மீண்டும், 'அ', தனது கைக்கடிகாரத்தை 'ஔ' க்கு அடகு வைத்திருந்தால், 'ஔ' ன் அனுமதியின்றி 'ஔ' யிடம் இருந்து அதை எடுத்துக் கொண்டால், கடிகாரத்தின் பேரில் கடன் வாங்கியதை செலுத்தாமல், அவர் திருடுகிறார். கடிகாரம் அவருடைய சொந்த சொத்தாக இருப்பினும், அவர் நேர்மையற்று செயல்படுகின்றார்.*

*(ஔ) 'ஔ' ன் அனுமதியின்றி, அவருக்குச் சொந்தமான ஒரு பொருளை, அதை திருப்பிக் கொடுப்பதற்கு வெகுமதியாக, அவர் 'ஔ' இடமிருந்து பணம் பெறும் வரை, அதை வைத்திருக்கும் நோக்கத்துடன். 'அ' எடுக்கின்றார். இங்கே 'அ' நேர்மையற்ற முறையில் எடுக்கின்றார். 'அ' திருட்டைச் செய்துள்ளார்.*

*(க) 'ஔ' உடன் நட்புரீதியாக இருக்கும் 'அ' என்பவர், 'ஔ' இன் நூலகத்திற்கு, அவர் இல்லாத நேரத்தில் சென்று, அவரின் வெளிப்படையான அனுமதியின்றி, ஒரு புத்தகத்தை வாசிப்பதற்காகவும், அதைத் திருப்பிக் கொடுக்கும் நோக்கத்துடனும், எடுத்துச் செல்கின்றார். இங்கே, 'ஔ'-ன் புத்தகத்தைப் பயன்படுத்துவதற்கு அவருக்கு 'ஔ'-ன் மறைமுக ஒப்புதல் இருப்பதாக கருதியிருக்கலாம். அவ்வாறு அவர் எண்ணி இருந்தால், 'அ' திருட்டை செய்யவில்லை.*

*(ங) 'அ' என்பவர் 'ஔ' இன் மனைவியிடம் யாசகம் கேட்கிறார். 'ஔ' இன் பணம், உணவு மற்றும் உடைகளை, அவரின் மனைவி, கொடுக்கிறாள். அவை 'ஔ' க்கு சொந்தமானது என்று 'அ' க்குத் தெரியும். இங்கே 'ஔ' இன் மனைவிக்கு தானம் வழங்க அதிகாரம் இருப்பதாக 'அ' கருத வாய்ப்புள்ளது. இது 'அ'ன் கருத்தாக இருந்தால், 'அ' திருட்டை செய்யவில்லை.*

*(ச) 'அ' என்பவர் 'ஔ' இன் மனைவியின் கள்ளக்காதலர். 'ஔ' இன் மனைவி அவருக்கு ஒரு மதிப்புமிக்க சொத்தை கொடுக்கிறார். 'அ' க்கு அவை அவரது கணவர் 'ஔ' க்கு சொந்தமானது என்றும், அத்தகைய சொத்தைக் கொடுக்க 'ஔ' இன் மனைவிக்கு அதிகாரம் இல்லை என்றும் தெரியும். 'அ' சொத்தை நேர்மையற்ற முறையில் எடுத்துக் கொண்டால், அவர் திருட்டைச் செய்கிறார்.*

*(ஞ) 'அ' என்பவர் நல்ல நம்பிக்கையில், 'ஆ' க்குச் சொந்தமான சொத்து, தன்னுடைய சொந்த சொத்து என்று நம்பி, 'ஆ' என்பவரின் உடைமையிலிருந்து, அந்த சொத்தை எடுக்கின்றார். இங்கே, 'அ' நேர்மையற்ற முறையில் எடுத்துக்கொள்ளாததால், அவர் திருட்டை செய்யவில்லை.*

*(2) திருடுபவர் யாராக இருந்தாலும், மூன்று ஆண்டுகள் வரை நீட்டிக்கக் கூடிய ஒரு காலத்திற்கு, ஏதேனும் ஒரு வகை சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும், மற்றும்*

*இந்தப் பிரிவின் கீழ் யாரேனும் ஒருவருக்கு இரண்டாவது முறையாக அல்லது அதற்குப் பிறகு தண்டனை விதிக்கப்பட்டால், அவர் ஒரு வருடத்திற்கு குறையாத, ஆனால் ஐந்து ஆண்டுகள் வரை நீட்டிக்கக் கூடிய ஒரு காலத்திற்கு கடுங்காவல் சிறைத் தண்டனையுடன் மற்றும் அபராதத்துடன் தண்டிக்கப்படுவார்.*

*வரம்புரையாக, திருடப்பட்ட சொத்தின் மதிப்பு ஐந்தாயிரம் ரூபாய்க்கு குறைவாக இருக்கும் திருட்டு வழக்குகளில், மற்றும் ஒரு நபர் முதன்முறையாக குற்றவாளியாக அறிவிக்கப்படுகிறார் என்றால்,*

- *சொத்தின் மதிப்பைத் திரும்பப் பெற்ற பிறகு அல்லது திருடப்பட்ட சொத்தை மீட்டெடுத்தால், சமூக சேவையுடன் தண்டிக்கப்பட வேண்டும்.*

**சட்டங்களின் ஒப்பீடு:** இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 378–ல் திருட்டு குறித்த வரையறை மாற்றமில்லாமல், இச்சட்டத்தில் பிரிவு 303 துணைப் பிரிவு (1)–ல் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் குற்றத்திற்கான தண்டனையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

- பிரிவு 379– ல் திருட்டுக்கு வழங்கப்படும் தண்டனை துணைப் பிரிவு (2)–ல் தக்க வைக்கப்பட்டுள்ளது. என்றாலும், இரண்டாம் தடவை அல்லது அதற்கு பின்னரும் குற்றம் செய்பவர்களுக்கு கூடுதல் தண்டனை வழங்க துணைப் பிரிவு (2) வழிவகை செய்கின்றது.
- மேலும் திருடப்பட்ட சொத்தின் மதிப்பு ஐந்தாயிரம் ரூபாய்க்கும் குறைவானது, பொருள் திருப்பிக் கொடுக்கப்பட்டது, மற்றும் அந்த நபர் முதல் முறையாக குற்றம் செய்கின்றார் எனில், அவருக்கு சமூகசேவையை தண்டனையாக வழங்க இப்பிரிவு அனுமதிக்கின்றது

**குற்றத்தின் வகை:** புலன்கொள் குற்றம், பிணைவிடாக் குற்றம், ஏதாவது ஒரு நடுவர்; சொத்தின் மதிப்பு ₹5,000 க்கு குறைவாக இருந்தால், புலன்கொள்ளாக் குற்றம், பிணைவிடு குற்றம், ஏதாவது ஒரு நடுவர்.

**சட்டப் பிரிவு என்ன சொல்கின்றது**

திருட்டு குற்றம் முழுமையடைய குற்ற நோக்கம் மற்றும் செயல் (Mens Rea and Actus Reus) இரண்டும் வேண்டுமென்பதை இப்பிரிவின் வரையறை கூறுகின்றது.

1. **நோக்கம்:** ஒரு அசையும் சொத்தை, ஒரு நபரின் உடமையில் (possession) இருந்து, நேர்மையற்ற முறையில் (dishonestly) எடுத்துக்கொள்ள,
   - ஒரு நபர் நோக்கம் கொண்டிருக்கின்றார்.
2. **செயல்:** அந்த நபரின் அனுமதியின்றி, அத்தகைய சொத்தை எடுத்துக் கொள்வதற்காக, அந்த சொத்தை நகர்த்துகிறார்.

3. அவர் திருட்டைச் செய்வதாகக் கூறப்படுகின்றது.

**காரணிகள்:** ஒரு செயலை திருட்டு என்று கருத, அதில் பின்வரும் காரணிகள் இருக்க வேண்டும்:

1. அசையும் சொத்து.
2. ஒரு நபரின் உடமையில் (possession) இருந்தது.
3. நேர்மையற்ற முறையில் (dishonestly) எடுத்துக்கொள்ளும் நோக்கத்துடன் மற்றொரு நபர் செயல்படுகின்றார்.
4. அசையும் சொத்து, அந்த நபரின் அனுமதியின்றி எடுக்கப்பட்டது.
5. அந்த சொத்து நகர்த்தப்பட்டது.

சொத்தை நகர்த்தும் நேரத்தில், சொத்தை உடமையாகக் கொண்டிருந்தவரின் ஒப்புதல் இல்லாமை, எடுத்துக்கொள்ளும் நேரத்தில் நேர்மையற்ற எண்ணம் இருப்பது ஆகியவை திருட்டு குற்றத்தின் இன்றியமையாத காரணிகள்.

1. **"அசையும் சொத்து"** (Movable property)

அசையும் சொத்தை மட்டுமே திருட்டு குற்றத்திற்கு உட்படுத்த முடியும். "அசையும் சொத்து" என்பதை, இந்தச் சட்டத்தில், பிரிவு 2 (21) பின்வருமாறு வரையறுகின்றது.

"அசையும் சொத்து" என்ற வார்த்தைகள்,

- நிலம் மற்றும் பூமியுடன் இணைக்கப்பட்ட பொருட்கள் அல்லது பூமியுடன் இணைக்கப்பட்ட பொருட்களுடன் நிரந்தரமாக பொறுத்தப்பட்டவை தவிர,
- எந்தவொரு வகையிலுமான சொத்தை (every description) உள்ளடக்கியது.

**"அசையும் சொத்து"- சட்டங்களின் ஒப்பீடு:** இந்திய தண்டனைச் சட்டம், 1860-ன் பிரிவு 22 - ல் கொடுக்கப்பட்டு இருந்த "அசையும் சொத்து" என்ற சொல்லின் வரையறை, சிறு மாற்றத்துடன், இந்தச் சட்டத்தில் பிரிவு 2 (21) -ல் கொடுக்கப்பட்டுள்ளது.

எந்தவொரு வகையிலுமான பருப்பொருள் சொத்து (corporeal property of every description) என வரையறுக்கப்பட்டு இருந்ததில், 'பருப்பொருள்' (corporeal) என்ற வார்த்தை நீக்கப்பட்டுள்ளது.

- நிலம் மற்றும் பூமியுடன் இணைக்கப்பட்ட பொருட்கள், அல்லது பூமியுடன் இணைக்கப்பட்ட பொருட்களுடன் நிரந்தரமாகப் பொறுத்தப்பட்டவைத் தவிர,
- உருவமற்ற சொத்து (incorporeal property) உட்பட அனைத்துச் சொத்துக்களும்,
  - வரையறையில் உட்படுத்தப்பட்டுள்ளன.

இதன் விளைவாக,

- நிலம்,
- அதனுடன் இணைக்கபட்டவை (கட்டிடம் போன்றவை),
- பூமியுடன் இணைக்கப்பட்ட பொருட்களுடன் நிரந்தரமாக பொறுத்தப்பட்டவை (சன்னல் கதவு போன்றவை)

- தவிர அனைத்தும், இந்தச் சட்டத்தின் விதிகளுக்கு, அசையும் சொத்துக்கள்.

**உருவமற்ற சொத்து (incorporeal property):** இந்திய தண்டனைச் சட்டத்தில் அசையும் சொத்து என்பது "பருப்பொருள் (corporeal) சொத்து" மட்டுமே என்று கட்டுப்படுத்தப்பட்டு இருந்தது. இந்தச் சட்டத்தில் "பருப்பொருள் (corporeal) சொத்து" என்ற வார்த்தைகள் நீக்கப்பட்டதால், வரையறையில் குறிப்பிடப்பட்ட அசையாச் சொத்துக்கள் தவிர, உருவமற்ற சொத்து (incorporeal property) உட்பட அனைத்துச் சொத்துக்களும் 'அசையும் சொத்து' என்பதன் வரையறையில் உட்படுத்தப்பட்டுள்ளன.

நிலம் மற்றும் பூமியுடன் இணைக்கப்பட்ட பொருட்கள் அல்லது பூமியுடன் இணைக்கப்பட்ட பொருட்களுடன் நிரந்தரமாக பொறுத்தப்பட்டவை தவிர அனைத்துச் சொத்துக்களும், இந்த வரையறையின்படி, அசையும் சொத்துக்கள்.

எடுத்துக்காட்டாக, இணையவழி விற்பனை நிறுவனத்திற்குச் சொந்தமான வாடிக்கையாளர் குறித்த மின்னணு தரவுகளும் (electronic records) கூட அசையும் சொத்தில் உட்படும். அவற்றைத் திருடுவதும், இந்தச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றமாகும்.

**பூமியில் இருந்து துண்டிக்கப்படுத்தல்:** அசையும் சொத்தாக இல்லாமல், பூமியுடன் இணைந்திருக்கும் ஒரு சொத்து, திருட்டுக்கு உட்பட்டது அல்ல. ஆனால், அது பூமியிலிருந்து துண்டிக்கப்பட்டவுடன் திருட்டுக்கு ஆளாகும் திறன் கொண்டது.

துண்டிக்கப்படுவதை விளைவிக்கும் அதே செயலால் ஏற்படும் நகர்வு, ஒரு திருட்டாக இருக்கலாம்.

<u>எடுத்துக்காட்டு:</u>

- பூமியில் நின்று கொண்டு இருக்கும் மரம் அசையாச் சொத்து. அதைத் திருட, மரத்தை வெட்டி, தரையில் வீழ்த்துகின்றவர், மரத்தை வெட்டியவுடன், அவர் திருட்டைச் செய்துள்ளார்.
- கற்பாறை உடைக்கப்பட்டு கற்களாக மாற்றப்படும் போது, அவை அசையும் சொத்துக்கள். கற்கள் திருட்டுக்கு உட்படும்.

2. **உடமையில் (possession) இருந்தது**

ஒரு நபரின் உடமையில் (possession) இருந்து சொத்து நகர்த்தப்பட்டு இருக்க வேண்டும்.

<u>எடுத்துக்காட்டுகள்:</u>

- ஒரு மேசையில், வீட்டு உரிமையாளரின் மோதிரம் இருப்பதைக் கண்டு, வீட்டின் வேலைக்காரி எடுத்தால் அது திருட்டு.
- 'அ' என்பவர் நெடுஞ்சாலையில் ஒரு மோதிரம் கிடப்பதைக் கண்டார். அது எந்தவொரு நபரின் கையிலும் உடமையாக (possession) இல்லை. 'அ' அதை எடுத்துக் கொள்வதன் மூலம், அவர் எந்த திருட்டையும் செய்யவில்லை. இருப்பினும் அவர் சொத்துக்களை 'குற்றமுறு கையாடல்' (misappropriation of property) குற்றம் செய்திருக்கக் கூடும்.

3. **நேர்மையற்ற முறை (dishonestly):**

இச்சட்டத்தின் பிரிவு 2(7), நேர்மையற்ற (dishonestly) என்பதனை பின்வருமாறு வரையறுக்கின்றது:

- "ஒரு நபருக்குத் தவறான ஆதாயம் அல்லது மற்றொரு நபருக்கு தவறான இழப்பை ஏற்படுத்தும் நோக்கத்துடன் யார் எதையும் செய்கிறார்களோ, அந்த காரியத்தை நேர்மையற்ற முறையில் செய்வதாகக் கூறப்படுகின்றது".

**பிரிவு 2 (36) மற்றும் பிரிவு 2(37), "தவறான ஆதாயம்", "தவறான இழப்பு" ("Wrongful gain", "Wrongful loss")** என்பதை பின்வருமாறு வரையறுக்கின்றது:

- "தவறான ஆதாயம்" என்பது சொத்தைப் பெறும் நபருக்கு, சட்டப்படி உரிமை இல்லாத சொத்தை, சட்டவிரோத வழிகளில் ஆதாயமாகப் பெறுதல்.
- "தவறான இழப்பு" என்பது சொத்தை இழந்த நபருக்கு, சட்டப்படி உரிமை உள்ள போது சட்டவிரோத வழிமுறைகளால் இழப்பு.

**பிரிவு 2 (38), "தவறான ஆதாயம் அடைதல்" மற்றும் "தவறான இழப்பு" ("gaining wrongfully" and "losing wrongfully")** என்பதை பின்வருமாறு வரையறுக்கின்றது.

- ஒரு நபர், தவறாக வைத்திருக்கும் போது, மற்றும் தவறாகப் பெறும் போது (retains/acquires wrongfully), அத்தகைய நபர் தவறாக ஆதாயம் பெற்றார் என்று கூறப்படுகின்றது.
- ஒரு நபர் எந்த சொத்திலிருந்தும் தவறாக அப்புறப்படுத்தி வைக்கப்படும் போது, மற்றும் சொத்துக்கள் தவறாக பறிக்கப்படும் பொழுது (wrongfully kept out of property and wrongfully deprived of property), அத்தகைய நபர் தவறாக இழந்தார் என்று கூறப்படுகின்றது.

சுருக்கமாக கூறுவதானால், தவறான இழப்பை ஏற்படுத்தும் நோக்கத்துடன், ஒரு நபர் செயல்பட்டு. சொத்துக்கு உரிமையுள்ள நபர், சொத்தை இழக்கும் போது, தவறான இழப்பு ஏற்படுகின்றது. ஒரு நபருக்கு அவ்வாறு தவறான இழப்பு ஏற்படுத்துகின்றவர், நேர்மையற்ற முறையில் செயல்படுகின்றார்.

<u>எடுத்துக்காட்டு</u>: 'ஔ' உடன் நட்புரீதியாக இருக்கும் 'அ' என்பவர், 'ஔ' இன் நூலகத்திற்கு, அவர் இல்லாத நேரத்தில் சென்று, அவரின் வெளிப்படையான அனுமதியின்றி, ஒரு புத்தகத்தை வாசிப்பதற்காகவும், அதைத் திருப்பிக் கொடுக்கும் நோக்கத்துடனும், எடுத்துச் செல்கின்றார். இங்கே நேர்மையற்ற முறையில் செயல்படாததால், திருட்டுக் குற்றம் செய்யப்படவில்லை.

**சொத்தை தற்காலிகமாக தக்கவைத்தல்:** தவறான இழப்பு என்பது சட்டப்பூர்வமாக உரிமை உள்ள நபர், சட்டவிரோதமாக சொத்தை இழப்பது. நிரந்தர சொத்து இழப்பு ஏற்படத் தேவையில்லை. சொத்தை தற்காலிகமாக அகற்றுவதன் மூலம் கூட ஏற்படலாம். அதை

எடுத்துக் கொண்ட நபர், விரைவில் அல்லது பின்னர் அதை திருப்பிக் கொடுக்க விரும்பினாலும் கூட, அது தவறான இழப்பு.

**பியாரே லால் பார்கவா எதிர் ராஜஸ்தான் மாநிலம்: (Pyare Lal Bhargava vs State of Rajasthan: 1963 AIR 1094):**

- குற்றம் சாட்டப்பட்டவர் அரசு அலுவலகத்தில் கண்காணிப்பாளராக இருந்தார். அவர் செயலகத்திலிருந்து ஒரு கோப்பை (file) அகற்றி, அதை வீட்டிற்கு எடுத்துச் சென்று, உடன் குற்றம் சாட்டப்பட்ட, தனது நண்பருக்கு கிடைக்கச் செய்தார். அவர் சில ஆவணங்களை மாற்றினார் மற்றும் அகற்றினார். அடுத்த நாள் கோப்பு திருப்பி வைக்கப்பட்டது.
- குற்றம் சாட்டப்பட்டவர் திருட்டு குற்றத்தை செய்ததாக உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

**கே. என் மெஹ்ரா எதிர் ராஜஸ்தான் மாநிலம்: (K. N. Mehra vs The State of Rajasthan: 1957 AIR 369):**

- மெஹ்ரா மற்றும் பிலிப்ஸ் என்பவர்கள் இந்திய விமானப்படை பயிற்சி கல்லூரியில் மாணவர்களாக இருந்தனர். அவர்கள் அங்கீகாரம் இல்லாமல், மற்றும் தேவையான நடைமுறைகளைச் செய்யாமல், ஒரு விமானத்தை எடுத்துச் சென்றனர். அவர்கள் வழி மாறி, இந்திய-பாகிஸ்தான் எல்லையில் இருந்து சுமார் 100 மைல் தொலைவில், பாகிஸ்தானில் உள்ள ஒரு இடத்தில் தரையிறங்கினர். இந்திய தூதரக அதிகாரிகள், இருவரையும் மற்றும் விமானத்தையும் திருப்பி அனுப்ப ஏற்பாடு செய்தனர்.
- உச்ச நீதிமன்றம், அவர்களை திருட்டுக் குற்றவாளிகளாக தீர்ப்பளித்தது. ஒரு நடவடிக்கையில், ஆதாயம் அல்லது இழப்பு என்பது மொத்தமாகக் சொத்தை கையகப்படுத்தல் அல்லது மொத்தமாகப் பறிக்கப்பட்டது என்று இருக்க வேண்டியதில்லை என்றும், அது சட்டவிரோதமாக உரிமை பெற்ற நபரிடமிருந்து, சொத்தை தற்காலிகமாக அப்புறப்படுத்தல் அல்லது சொத்தை தற்காலிகமாக "வைத்திருத்தல்" போதுமானது என்றும் நீதிமன்றம் கூறியது.

**நிதி உதவி அளிக்கப்பட்ட பொருட்களின் மீட்பு: சுந்தரம் ஃபைனான்ஸ் லிமிடெட் எதிர் முகமட் அப்துல் வகீல் (Sundaram Finance Ltd vs Mohd. Abdul Wakeel; 2001 CriLJ 2441)** என்ற வழக்கில்,

- தவணை முறை விற்பனை ஒப்பந்தத்தின்படி (hire-purchase agreement), நிதி உதவி செய்தவர், அந்த ஒப்பந்தத்தின் விதிமுறைகளின்படி, நிதி உதவி செய்யப்பட்ட ஒரு வாகனத்தை வைத்திருப்பவரிடமிருந்து திரும்பப் பெற முடியும் என்று மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றம் கூறியது.
- மேலும், வழங்கப்பட்ட கடனுக்கு தவணை செலுத்தாமல் இருக்கும் போது, உடைமை மீட்பு உரிமையுடன் (right of redelivery of possession) வாகனத்தை எடுக்கும் போது, அவர் திருட்டு குற்றவாளி என்று கூற முடியாது. வாகனத்தை நேர்மையற்ற முறையில் எடுக்கும் எண்ணம் இல்லை என்றும் கூறியது. பிரிவு 378 ன் படி (இச்சட்டத்தின் பிரிவு 303), திருட்டு குற்றத்தின் அத்தியாவசிய காரணிகள் இல்லாததால், அது திருட்டு அல்ல என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

**நோக்கம்: கிருஷ்ணா கே. ரெட்டி எதிர் ஆர்.டி.போயர் (Krishna K. Reddy v. R. D. Bhoyar; 2008 CRILJ 685):**

- குற்றம் சாட்டப்பட்டவர்கள், மகாராஷ்டிரா மாநில கூட்டுறவு நில மேம்பாட்டு வங்கியின் ஊழியர்கள். புகார்தாரர் தனது சகோதரருடன் சேர்ந்து சொத்தை அடமானம் வைத்திருந்தார். அவருக்குச் சொந்தமான பொருட்களை கைப்பற்ற, அவர்களுக்கு உரிமை உண்டு என்று வங்கியின் ஊழியர்கள் நம்பினர்.

குற்றம் சாட்டப்பட்ட வங்கி ஊழியர்களுக்கு திருட்டு மற்றும் அத்துமீறல் குற்றங்களைச் செய்ய எந்த நோக்கமும் இல்லை என்பதால் அவர்கள் குற்றவாளி அல்ல என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

4. **நகர்த்துதல்:**

இந்த வரையறையில் கூறப்படும் பிற நிபந்தனைகளுக்கு இணங்க செயல்பட்டு, அசையும் சொத்தை நகர்த்தும் நேரத்தில் திருட்டுக் குற்றம் முழுமையடைகின்றது. அசையும் சொத்தை நகர்த்துகிற நபர், குற்றம் செய்தவராகின்றார்.

எடுத்துக்காட்டு: 'ஔ' இன் ஒரு மோதிரம், அவரின் வீட்டில், ஒரு மேஜையில் கிடப்பதை 'அ' காண்கிறார். அது தேடப்படும் மற்றும் கண்டறியப்படும் எனப் பயந்து, உடனடியாக மோதிரத்தை தவறாகப் பயன்படுத்தத் துணியவில்லை. காணமல் போனதை மறந்தவுடன், மறைந்திருக்கும் இடத்திலிருந்து, மோதிரத்தை எடுத்து விற்கும் நோக்கத்துடன், 'ஔ' ஆல் கண்டு பிடிக்க மிகவும் சாத்தியமற்ற ஒரு இடத்தில் மோதிரத்தை மறைக்கின்றார். இங்கே 'அ', மோதிரத்தை முதலில் நகர்த்தும் நேரத்தில், திருட்டைச் செய்கிறார்.

ஒரு நபர், ஒரு பொருளை, பின் வரும் வழிகளில் நகர்த்தலாம்.

i. நகர்த்துவதைத் தடுக்கும் ஒரு தடையை அகற்றுவதன் மூலம் (எடுத்துக்காட்டு: படகுத்துறையில் கட்டப்பட்டிருக்கும் படகைக் கட்டியிருக்கும் கயிற்றை அவிழ்ப்பதன் மூலம் நகர்த்துதல்); அல்லது
ii. வேறு எந்த விஷயத்திலிருந்தும் அதை பிரிப்பதன் மூலம் (எடுத்துக்காட்டு: நீரில் இருந்து பிடிக்கப்பட்ட மீன்கள்); அல்லது
iii. உண்மையில் அதை நகர்த்துவதன் மூலம் (எடுத்துக்காட்டு: ஒரு நபர் தனது சட்டைப் பையில் இருந்து நாய்களுக்கு இரையை வைக்கின்றார். இதனால் நாய் அவரைப் பின் தொடருகின்றது. அவர் நாயை நகர்த்துவதாகக் கூறப்படுகின்றது).

**விலங்கால் நகர்த்தப்பட்டவை:** எந்த வகையிலும், ஒரு விலங்கு நகர்வதற்கு காரணமாக இருக்கின்ற நபர், அந்த விலங்கை நகர்த்துவதாகக் கூறப்படுகின்றது. மற்றும் அந்த இயக்கத்தின் விளைவாக, அந்த விலங்கால் நகர்த்தப்பட்ட அனைத்தையும் நகர்த்துவதாகக் கூறப்படுகின்றது.

எடுத்துக்காட்டு: திரவியப் பெட்டியை (treasure box) எடுத்துச் செல்லும் வண்டியில் கட்டப்பட்ட காளை மாட்டை, ஒரு நபர் நேர்மையற்ற முறையில் திரவியத்தை (treasure) எடுத்துச் செல்வதற்காக, அவர் ஒரு குறிப்பிட்ட திசையில் காளையை விரட்டுகிறார். காளை மாடு நகரத்